# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066008

1. District / மாவட்டம் : The Nilgiris  PS: / காவல்நிலையம் : VEAC, Ooty  Year: / ஆண்டு : 2019  FIR No. / மு.த.அ. எண் : 10/19  Date: / நாள் : 25.10.2019

2. (i) Act சட்டம்: Cr.PC  Sections பிரிவுகள்: 102

(ii) Act சட்டம்: PC (Amendment) Act 2018  Sections பிரிவுகள்: 7 (A)

(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from / நாள் முதல் : 24.10.19  Date to / நாள் வரை : Prior to 24.10.19. 1300 hrs.

Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.10.19  Time / நேரம் : 11.30 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்  Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  Written complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்  About 1km, south west

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி  Agricultural Engineering and Agri office (Quality control) Rose garden, udhagamandalam.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  H. Prakash  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில்  Huzur Sarishtadar (Magisterial)  (g) Address : முகவரி  I/c District Inspection cell officer District collectorate. udhagamandalam, The Nilgiris.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1. R. Siva Kumar - Assistant Director (Quality control) Agricultural office, Rose garden campus, udhagai.
2. K. Subramanian - agricultural officer, Agricultural office Rose garden campus, udhagai.
3. X. Rajan - superintendent. Agricultural Engineering office o/o Executive Engineer, Agricultural Engineering Rose garden campus, udhagai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/10/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

[signature: Geethalakshmi] 25/x/19

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15: Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ப. கீதாலட்சுமி
Rank: நிலை ......................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
உ.த.க. பிரிவு, நீலகிரி மாவட்டம்.

நீலகிரி மாவட்ட ஊ.த.க. பிரிவு குற்ற எண்.10/2019/AC/NI வழக்கின் முதல் தகவல் அறிக்கை.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

இன்று 25.10.2019 ஆம் தேதி முற்பகல் சுமார் 11.30 மணிக்கு நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் B.கீதாலட்சுமி ஆகிய நான் அலுவலகத்தில் இருந்த போது நீலகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் திரு.H.பிரகாஷ் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் விவரம் பின்வருமாறு: உதமண்டலம், நாள்:25.10.2019. அனுப்புநர் H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதமண்டலம், நீலகிரி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதமண்டலம், நீலகிரி மாவட்டம். அம்மையீர், பொருள்:- திடீர் தணிக்கை – நடவடிக்கை கோருதல் சம்பந்தமாக. பார்வை:- நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் Pdl.A1.No.30/2019, நாள்.24.10.2019. நேற்று 24.10.2019 ஆம் தேதி எனது தலைமையில், உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் மற்றும் பார்ட்டி சகிதம் உதகமண்டலம், விஜயநகரம் ரோஜா பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் அலுவலக அதிகாரிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள், மரம் வெட்டவும், வீடு கட்டவும், தடையில்லா சான்று வழங்க பொதுமக்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைக்கப் பெற்ற நம்பகமான தகவலின் பேரிலும் மற்றும் அதே அலுவலக கட்டிடத்தில் இயங்கிவரும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) அலுவலக அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்யும் கடை உரிமையாளர்களிடம் அவர்களது கடையின் உரிமத்தை புதுப்பிப்பதற்கு லஞ்சம் வாங்குவதாக கிடைத்த தகவலின் பேரில் மேற்படி இரண்டு அலுவலகங்களையும் நேற்று 24.10.2019 ஆம் தேதி 13.00 மணி முதல் 17.00 மணி வரை திடீர் தணிக்கை செய்தோம். இது சம்பந்தமாக தயாரிக்கப்பட்ட

B.Geethalakshmi
25/x/19

நடவடிக்கை குறிப்பை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த திடீர் தணிக்கையின் போது மேற்படி உதகமண்டலம், வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் அலுவலகத்தில் பணியில் இருந்த கண்காணிப்பாளர் திரு.X.ராஜன் என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத லஞ்சப்பணம் ரூ.18,170/- கைப்பற்றப்பட்டது. மேலும் உதகமண்டலம், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) அலுவலக அலுவலகத்தில் பணியில் இருந்த வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுபாடு) திரு.K.சுப்ரமணியன் என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத லஞ்சப்பணம் ரூ.28,233/- மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திரு.R.சிவக்குமார் என்பவரிடமிருந்து கணக்கில் காட்டப்படாத லஞ்சப்பணம் ரூ.21,400/- கைப்பற்றப்பட்டது. ஆக மேற்படி இரண்டு அலுவலகங்களிலிருந்தும் கைப்பற்றப்பட்ட கணக்கில் வராத லஞ்சப்பணம் மொத்தம் ரூ.67,803/- தங்களிடம் ஒப்படைக்கிறேன். மேற்படி கணக்கில் வராத லஞ்சப்பணம் வைத்திருந்த 1) உதகமண்டலம் வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் அலுவலக கண்காணிப்பாளர் திரு.X.ராஜன், 2) உதகமண்டலம், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) அலுவலக வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுபாடு) திரு.K.சுப்ரமணியன் மற்றும் 3) உதகமண்டலம், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) அலுவலக உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) திரு.R.சிவக்குமார் ஆகியோர் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். ஒப்பம் XXX H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்) மற்றும் பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதமண்டலம், நீலகிரி மாவட்டம். நகல்: மாவட்ட ஆட்சியர், உதகமண்டலம் அவர்களுக்கு தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது. Submitted. Received the above typed complaint Dated.25.10.2019 along with the proceedings and cash Rs.67,803/- on 25.10.2019 at 11.30 hrs and registered a case in Udhagamandalam Vigilance and Anti-Corruption Cr.No.10/2019/AC/NI, u/s 102 Cr.P.C. r/w Section 7(A) of PC (Amendment) Act 2018. ஒப்பம் B.கீதாலட்சுமி 25.10.2019, Inspector of Police, V&AC, The Nilgiris.

25/x/19

செயல்முறை நடவடிக்கைகள் பின்வருமாறு: Proceedings of the Surprise Check conducted on 24.10.2019 between 13.00 hrs and 17.00 hrs at Office of the Executive Engineer, Agricultural Engineering Department and Assistant Director of Agriculture (Quality Control), Joint Director of Horticulture office campus, Rose Garden Complex, Vijayanagaram, Udhagamandalam, The Nilgiris District. முன்னிலை: 1) திரு.H.பிரகாஷ், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், உதகமண்டலம், நீலகிரி மாவட்டம் (பொறுப்பு) மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம். 2) திருமதி. B.கீதாலட்சுமி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம். இன்று 24.10.2019–ஆம் தேதி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம், தலைமை பொறுப்பாளர் (குற்றவியல்), பொறுப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், நீலகிரி மாவட்டம் திரு.H.பிரகாஷ் ஆகிய நான், நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் அளித்த உத்தரவின்படி நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி என்பவருடன் பார்ட்டி சகிதம் நீலகிரி மாவட்டம், உதகமண்டலம், விஜயநகரம், ரோஜா பூங்கா வளாகத்தில் அமைந்துள்ள வேளாண் பொறியியல் துறை அதிகாரிகள் மற்றும் அலுவலக பணியாளர்கள் மரம் வெட்டவும், வீடுகட்டவும் தடையில்லா சான்று வழங்க கோரும் பொதுமக்களிடம் லஞ்சம் பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலின் பேரிலும் மற்றும் அதே அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்திள்ள அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நீலகிரி மாவட்டத்திலுள்ள உரம் மற்றும் பூச்சிருந்து விற்பனை செய்யும் கடைக்காரர்களை அலுவலகம் வரவழைத்து அவர்களது உரிமம் புதுப்பிக்க லஞ்சம் வாங்குவதாகவும், வருகின்ற 27.10.2019 ஆம் தேதி கொண்டாட இருக்கின்ற பண்டிகைக்காக மாமூல் வாங்குவதாகவும் கிடைத்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி இரண்டு அலுவலகங்களிலும் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. திடீர் தணிக்கை சகிதம் உதகமண்டலம், விஜயநகரத்தில் உள்ள தோட்டக்கலை இணை இயக்குநர்

Geethalakshmi
25/X/19

அலுவலக வளாகத்திலுள்ள பொது நுழைவாயில் மேற்கு பார்த்தவாறு அமைந்துள்ளது. நுழைவாயிலின் இடது பக்கம் மேற்கு பார்த்த தனியறையில் வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் திரு.S.பிரபு, B.E. அவர்களது அறை உள்ளது. அந்த அறையில் அவர் இல்லை. அவர் இன்று மாநில திட்டக்குழு கூட்டம் (SADP) சென்னையில் இன்று (24.10.2019) நடைபெறவிருப்பதால் 21.10.2019 அன்று செயற் பொறியாளர், திரு.பூபாலன், உதவி செயற்பொறியாளர் மற்றும் வரைதொழில் அலுவலர் திரு.N.நாகராஜ் ஆகியோருடன் சென்னை சென்றுள்ளதாக கண்காணிப்பாளர் திரு.X.ராஜன் அவர்கள் தெரிவித்தார். அந்த அறைக்கு நேர் எதிரே கிழக்கு பார்த்த அறையில் கிழக்கு பார்த்த மேஜையில் கண்காணிப்பாளர் திரு.X.ராஜன் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்த ரூ.18,170/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் சொல்லாததால் அந்த பணம் மரம் வெட்ட தடையில்லா சான்று வழங்க பொதுமக்களிடமிருந்து பெற்ற லஞ்சப்பணமாக இருக்கலாம் என்று பணம் ரூ.18,170/– அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டது. அவருக்கு அருகில் இருந்த இருக்கையில் உதவியாளர் திரு.சரவணன் என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவரிடம் பணம் ஏதும் இல்லை. அடுத்ததாக இருந்த தட்டச்சர் திரு.முத்து என்பவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலது பக்க பாக்கெட்டிலிருந்து ரூ.1,500/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்ட அவர் தனது சொந்த ஊர் திருநெல்வேலி என்றும் மாத செலவிற்காக பணம் ரூ.1,500/– ஐ வைத்திருந்ததாக கூறியதால் அது அவருடைய சொந்தப்பணம் என்று அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்ததாக இருந்த இருக்கையில் மேற்கு பார்த்தவாறு உதவியாளர் திரு.மணிகண்டன் என்பவர் இருந்தார், அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பேண்ட் பாக்கெட்டிலிருந்து ரூ.160/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் தன்னுடைய சொந்தப்பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக இருந்த இருக்கைகள் அனைத்தும் காலியாக இருந்தது. அந்த

Geethalakshmi
25/x/19

அறையில் தனியாக இருந்த உதவி செயற் பொறியாளர் திரு.பூபாலன் என்பவர் சென்னை சென்றிருந்ததால் அந்த அறை காலியாக இருந்தது. அதன்பிறகு பொது நுழைவாயிலின் வலது பக்கமாக வேளாண்மை துறை அலுவலகங்கள் இருந்தது. முதலில் மேற்கு பார்த்தவாறு இருந்து அறையில் முதலாவதாக இருந்த உரக்கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் திருமதி.சுகப்பிரியா என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து ரூ.1,400/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்பதால் அந்த பணம் ரூ.1,400/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவருக்கு அருகில் இருந்த இருக்கையில் உரக்கட்டுபாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் திருமதி.காயத்ரி என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து ரூ.1,250/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால் அந்த பணம் ரூ.1,250/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அடுத்ததாக இருந்த இருக்கையில் உரக்கட்டுப்பாட்டு ஆய்வக வேளாண்மை அலுவலர் திருமதி.S.லாவண்யா ஜெயசுதா என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பர்ஸிலிருந்து ரூ.400/– ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்தப்பணம் என்பதால் அந்த பணம் ரூ.400/– அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி அறைக்கு எதிரே கிழக்கு பார்த்தவாறு வேளாண்மை உரக்கட்டுபாட்டு ஆய்வகம் இருந்தது. அந்த அறையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர் செல்வி.பிரேமா என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தன்னுடைய பர்ஸிலிருந்து ரூ.200/–ஐ எடுத்து ஆஜர் செய்தார், அது அவருடைய சொந்த பணம் என்பதால் அந்த பணம் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி ஆய்வுக்கூடத்திற்கு எதிரே சற்று தள்ளியிருந்த வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம் (தரக்கட்டுபாடு) அலுவலகத்தின் நுழைவாயிலின் இடது புறத்திலிருந்த பதிவறை எழுத்தரின் இருக்கையில் யாரும் இல்லை. அதற்கு அடுத்ததாக இருந்த இருக்கையில் வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுபாடு) திரு.K.சுப்ரமணியன் என்பவர் இருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தன்னுடைய பேண்டின் வலதுபுற

Geethalakshmi
25/x/19

பாக்கெட்டிலிருந்து ரூ.28,233/- தானாக முன்வந்து எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க அவர் சரியான முகாந்திரம் கூறாததால் அந்த பணம் ரூ.28,233/- லஞ்சப்பணம் என்று கைப்பற்றப்பட்டது. அவருக்கு அருகில் மேற்கு பார்த்து அமர்ந்திருந்த தட்டச்சர் செல்வி.பிரியங்கா அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து ரூ.1,690/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்க, அவர் தனது சொந்த ஊர் நாமக்கல் என்பதால் மாத செலவிற்காக பணம் வைத்திருந்ததாக கூறியதால்அந்த பணம் அவருடைய சொந்த பணம் என்பதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. தட்டச்சருக்கு அருகில் மேற்கு பார்த்தவாறு இருந்த இருக்கையில் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுபாடு) திரு.R.சிவக்குமார் அமர்ந்திருந்தார். அவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.21,400/- எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை பற்றி கேட்ட சரியாக முகாந்திரம் சொல்லாததால், அந்த பணம் ரூ.21,400/- லஞ்சப்பணம் என்று கைப்பற்றப்பட்டது. அதற்கு அருகில் வடக்கு பார்த்து இருந்த மேஜையில் உதவியாளர் திரு.அரவிந்தராஜா என்பவர் இருக்கை காலியாக இருந்தது. அதைப்பற்றி கேட்க உதவி இயக்குநர் அவர் இன்று ஒரு நாள் தற்செயல் விடுப்பில் சென்றிருப்பதாக கூறினார். அடுத்ததாக இருந்த இருக்கையில் வடக்கு பார்த்தவாறு அமர்ந்திருந்த இளநிலை உதவியாளர் திருமதி.விஜயா என்பவரை தணிக்கை செய்ய அவர் தானாக முன்வந்து தனது பர்ஸிலிருந்து பணம் ரூ.500/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது அவருடைய சொந்த பணம் என்பதால், பணம் ரூ.500/- அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) அலுவலகங்களிலிருந்து விசாரணைக்காக கீழ்கண்ட சான்றொப்பமிட்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. 1) வருகை பதிவேடு, நாள்.24.10.2019 (வேளாண்மை பொறியியல் துறை), 2) வருகை பதிவேட்டின் ஆய்வு குறிப்பு, நாள்.24.10.2019 (வேளாண்மை பொறியியல் துறை), 3) திரு.முத்தே கவுடர் என்பவர் மரம் வெட்ட அனுமதி கோரிய மனு (1 முதல் 5 பக்கங்கள்), 4) வருகை பதிவேடு.

25/x/19

நாள்.24.10.2019 (வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு), 5) வருகை பதிவேடு, நாள்.24.10.2019 (வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு ஊழியர்கள்), 6) கொடிநாள் இரசீதுகள் (எண்.6040970 வரை அடிக்கட்டை உள்ளது மற்றும் 6040971 முதல் எழுதப்படாமல் உள்ளது), 7) கொடிநாள் வசூல் புத்தக பதிவேடு (1 முதல் 92 பக்கங்கள் வரை அதில் 1 முதல் 14 பக்கங்கள் வரை எழுதப்பட்டுள்ளது) 8) கொடுப்படா பதிவேடு (UDP) நாள்.29.03.2019, 9) Point of Sale machine issuing Register (Original), 10) Fertilizer Licence Issuing Register (Page Nos.1 to 272- used pages 1 to 245). 11) திரு.D.முருகேசன் (சுந்தரம் ஏஜென்சீஸ்), நஞ்சநாடு என்பவரின் பூச்சிமருந்து விற்பனை நிலையம் வைக்க விண்ணப்பம், 12) திரு.D.முருகேசன் (சுந்தரம் ஏஜென்சீஸ்), நஞ்சநாடு என்பவரின் பூச்சிமருந்து விற்பனை நிலையம் வைக்க விண்ணப்பம் சம்பந்தமாக அலுவலக குறிப்பு கோப்பு. இந்த திடீர் தணிக்கையான இன்று 24.10.2019 ஆம் தேதி 13.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 17.00 மணிக்கு முடிக்கப்பட்டது. முகாந்திரம் அளிக்காத பணம் மொத்தமாக ரூ.67,803/– கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் தணிக்கையின் போது வேளாண்மை பொறியியல் துறை மற்றும் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலக அலுவலர்கள் கண்ணியமாக நடத்தப்பட்டனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் பொறுப்பு திரு.H.பிரகாஷ், நீலகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திருமதி.B.கீதாலட்சுமி, வேளாண்மை பொறியியல் துறை கண்காணிப்பாளர் திரு.X.ராஜன், வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுபாடு), திரு.R.சிவக்குமார், வேளாண்மை அலுவலர் (தரக்கட்டுபாடு), திரு.K.சுப்ரமணியன் ஆகியோர் கையொப்பம் செய்தனர். இந்த திடீர் தணிக்கை செயல்முறையானது தலைமை காவலர் திரு.நா.சக்தி என்பவர் லேப்டாப்பில் தட்டச்சு செய்தார். நான் மேற்கண்ட புகாரினையும் செயல்முறை ஆணையினையும் இன்று 25.10.2019 ஆம் தேதி முற்பகல் 11.30 மணிக்கு பெற்று உதகமண்டலம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.10/2019/AC/NI, சட்டப் பிரிவு 102 Cr.P.C. r/w 7(A) Prevention of Corruption (Amendment) Act 2018–ன் படி வழக்கு பதிவு செய்து

B.Geethalakshmi
25/x/19

இந்த முதல் தகவல் அறிக்கையில் அசல், அசல் புகார், அசல் செயல்முறை மற்றும் படிவம் 91 மூலமாக கைப்பற்றப்பட்ட பணம் ரூ.67,803/– (ரூபாய் அறுபத்தி ஏழாயிரத்து எண்ணூற்று மூன்று மட்டும்) ஆகியவற்றை கனம் உதவி அமர்வு நீதிபதி மற்றும் சிறப்பு நீதிதிதி, உதகமண்டலம் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். முதல் தகவல் அறிக்கையில் நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

Geethalakshmi
25/x/13
காவல் ஆய்வாளர்
உ.த.க. பிரிவு
நீலகிரி மாவட்டம்.